<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி</u>

அ.சா.3 தேதி.17.10.2023

| SC. No. | 202/2018 | | |
|---|---|---|---|
| பெயர் | மோகன்ராஜன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரி ஆஜர் இல்லை. அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மயிலாடுதுறை மாவட்டம், பொறையார் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இறுதியாக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் ஏற்கனவே மயிலாடுதுறை மதுவிளக்கு அமல் பிரிவில் முதல் நிலை காவலராக பணியாற்றிய போது கடந்த 23.03.2005 அன்று ஆய்வாளர் வெங்கடேசன் தலைமையில் நானும், முதல்நிலை காவலர் 330 இளங்கோவன் என்பவரும் வாகன தணிக்கைக்காக அதிகாலை 3.30 மணியளவில் மாப்படுகை இராயில்வே கேட் அருகே கும்பகோணம் செல்லும் சாலையில் வாகன தணிக்கை செய்த போது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி TNZ4806 என்ற வெள்ளை நிற அம்பாசிட் கார் 3.45 மணிக்கு வந்த காரை நிறுத்திய போது நிருத்தாமல் சிறுதூரம் சென்று பின்னர் காரை நிருத்திவிட்டு அதன் ஓட்டுநர் இரங்கி ஓடிவிட்டார். நின்ற காரினை நாங்கள் சென்று பரிசோதனை செய்த போது முன் இருக்கையில் ஒரு சாக்கு பையில் ஒரு லாரி டியூப் மற்றும் பின் இருக்கையில் இரண்டு லாரி டியூப்பும், டிக்கியில் இரண்டு லாரி டியூப்பிலும் ஆக மொத்தம் 5 லாரி டியூப்புகளில் 60 லிட்டர் வீதம் ஆக மொத்தம் 300 லிட்டர் பாண்டி இசாராயம் இருந்தை நுகர்ந்து பார்த்தில் அதில் விஷ வாடை வீசியதால் அதை மாதிரிக்காக ஒவ்வொரு லாரி டியூப்பிலும் 2 பாட்டில்களில் 750 மிலி பிடிக்க கூடியதில் 500 மிலி வீதமாக மொத்தம் 10 பாட்டில்களில் மாதிரிகள் எடுத்து சீல் வைக்கப்பட்டு பின்பு 3.45 முதல் 4.30 சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகசர் ஆய்வாளர் தயார் செய்தார். 4.30 மணியளவில் தடையங்களை கைப்பற்றுதல் மகசரில் ஆய்வாளர் கைப்பற்றினார். பின்னர் 5 மணி முதல் 5 15 மணிக்கு அழிப்பு மகசரில் மாதிரிக்கு எடுத்து போக மீதம் உள்ள

இசாராயத்தை ஆய்வாளர் கொட்டி அழித்தார். மேற்படி கைப்பற்றுதல் மகசர், பார்வை மகசர், அழிப்பு மகசரில் முதல்நிலை காவலரான நாங்கள் இருவருமே சாட்சிகளாக இருந்து கையெழுத்து செய்தோம். பின்னர் 5.30 மணிக்கு நிலையம் வந்து ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நாங்கள் வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். என்னிடம் காண்பிக்கபடும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மற்றும் அழிப்பு மகசர் அ சா ஆ 1, 2 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடமானது மயிலாடுதுறை இருந்து கல்லண்ணை செல்ல கூடிய பிரதான சாலை என்றால் சரிதான். மாப்படுகை இரயில்வே கேட் அருகே கேட் கீப்பளர் 24 மணி நேரமும் பணியில் இருப்பார் என்றால் சரிதான். எத்தனை வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டது என்று எங்களால் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. அடையாளம் தெரியாத மூன்று 3 நபர்கள் என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மகசர் மற்று அழிப்பு மகசரை ஆய்வாளர் சொல்ல நான் எழுதினேன். ஆய்வாளர் தனி நபர் யாரிடமும் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்பதால் தான் பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிக்கு வழங்கப்பட்ட நகலில் 2 வது சாட்சியின் கையெழுத்து இல்லை என்றால் பேப்பர் மடங்கப்பட்டுள்ளதால் பாதி கையெழுத்து மட்டும் உள்ளது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெற வில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளரின் விசாரணையிலும் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சம்பவம் நடந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.